1974 சனவரி 30]

வந்தவாசியில் சாக்கடை அமைப்புத் திட்டம்

*** 218 வினா.—திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வந்தவாசி பேரூராட்சியில் சாக்கடை அமைப்புத் திட்டத்திற்கு கடன் அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்த வந்தவாசிப் பஞ்சாயத்திலிருந்து சில ஆண்டுகளுக்கு முன்பு டிரைனேஜ் ஸ்கீம் போட வேண்டும் என்று மனு வந்திருக்கிறதா? அது பற்றி அரசு பரிசீலனை செய்ததா? அதற்கு என்ன செய்தார்கள்? அமைச்சர் அவர்களிடமிருந்து இல்லை என்று பதில் கேட்டதற்குப் பிறகு, அதற்கு இனியாவது முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நான் சென்றபோது கூட டிரைனேஜ் திட்டம் தேவை என்று சொன்னார்கள். ஆனால் வாரியத்திற்கு அவர்கள் முறைப்படி விண்ணப்பம் செய்திருந்தால்தான், அந்த வாரியம் அதுபற்றி பரிசீலிக்க முடியும். அந்த வாரியத்திற்கு, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அவர்கள் விண்ணப்பிக்கவில்லை. ஆகவே, அது பற்றி விவரம் கேட்கிற பொழுது அவர்கள் அணுகவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

மாயூரத்தில் சாக்கடை அமைப்புத் திட்டம்

*** 219 வினா.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் பாதாளச் சாக்கடை அமைப்பு திட்டத்தினை செயல் படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம். தமிழ்நாடு அரசு 3—3—1970-ல் மாயூரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் அமைப்பதற்கான ஆய்வு மதிப்பீடு ரூ. 31,000-க்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஆய்வு வேலைகள் முடிவடைந்து உத்தேச திட்டம் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.